

புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2050 | ஆகஸ்டு 22, 2019 | புரட்சி 18 | முழக்கம் 32 | விலை: ரூ.3.00

## பள்ளிகளில் தீண்டாமை ஜாதி வெறியைத் தூண்டும்

# ஜாதிக் கயிறுகளுக்கு தடை போடுக!

பள்ளி மாணவர்கள் அவரவர் ஜாதி அடையாளங்களைக் குறிக்கும் வண்ணத்துடன் கைகளில் கயிறு கட்டிக் கொள்ளும் பழக்கம் தமிழ்நாட்டில் பல பள்ளிகளில் இருந்து வருகிறது. குறிப்பாக பிற்படுத்தப்பட்ட ஜாதி மற்றும் பட்டியல் இனப் பிரிவு மாணவர்கள் இத்தகைய அடையாளங்கள் வழியாகப் பள்ளிகளில் பாகுபாடுகளுடன் ஆசிரியர்களால் நடத்தப்படுகின்றனர். நெற்றியில் வைக்கப்படும் 'விபூதி - குங்கும'த்திலும் ஒவ்வொரு ஜாதிக்கும் ஒவ்வொரு அடையாளம் வரையறுக்கப்பட்டுள்ளது. இதனால் தென் மாவட்டங்களில் தலித், பிற்படுத்தப்பட்ட ஜாதி மாணவர்களுக்கிடையே மோதல்கள் நடந்துள்ளன. கொலைகளும் நடந்துள்ளன.

கடந்த 31ஆம் தேதி தமிழ்நாடு அரசின் பள்ளிக் கல்வித் துறை இயக்குநர், பள்ளிகளுக்கு அனுப்பிய சுற்றறிக்கையில் இந்த ஜாதிக் கயிறு, ஜாதிப் பொட்டு, ஜாதி மோதிரங்களை அணியும் வழக்கத்தைத் தடை செய்ய வேண்டும் என்று ஒரு சுற்றறிக்கையை அனுப்பியிருந்தார். பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் செங்கோட்டையன், இந்தச் சுற்றறிக்கை பற்றி தனக்கு ஏதும் தெரியாது என்று கூறினார். இப்படி ஒரு சுற்றறிக்கை ஆதிதிராவிடர் நலத் துறையிடமிருந்து தான் முதலில் வந்தது என்றும் அமைச்சர் கூறினார்.

தமிழ்நாட்டில் 99 சதவீதப் பள்ளிகளில் இத்தகைய ஜாதி பாகுபாடுகள் பின்பற்றப்படுவது இல்லை; புகார் வந்தால், அரசு நடவடிக்கை எடுக்கும் என்றார் செங்கோட்டையன். ஆனாலும் இந்த சுற்றறிக்கையை செயல்படுத்த வேண்டாம் என்று வாய்மொழியாக அமைச்சர் அறிவுறுத்தி விட்டார்.

இப்படி பள்ளிக் கல்வி இயக்குநர் ஒரு சுற்றறிக்கை அனுப்பியதற்கான பின்னணி என்ன? உ.பி. மாநிலம் முசோரியில் அய்.ஏ.எஸ். தேர்ச்சி பெற்றவர்களுக்கான பயிற்சி மய்யம் செயல்படுகிறது. அங்கே பயிற்சி பெற்ற அய்.ஏ.எஸ். பயிற்சியாளர்கள் தமிழ்நாட்டில் இப்படி 'ஜாதிக் கயிறு' முறை அமுலில் இருப்பதை அறிந்து அதைத் தடை செய்ய தமிழக அரசிடம் கோரிக்கை விடுத்தனர். அதைத் தொடர்ந்துதான் பள்ளிக் கல்வி இயக்குனர், இப்படி ஒரு சுற்றறிக்கையை அனுப்பினார். (அண்மையில் ஜோதிகா நடித்து தமிழில் வெளி வந்த 'இராட்சசி' என்ற திரைப்படம், 'இந்த ஜாதிக் கயிறு' பாகுபாடுகளை காட்சிகளாக வைத்திருந்தது.)

பா.ஜ.க.வைச் சார்ந்த வர்ணாஸ்ரம வெறியில் ஊறிப் போய் நிற்கும் எச். ராஜா என்ற பார்ப்பனர், இந்த சுற்றறிக்கை இந்து மதத்துக்கு எதிரானது; அதைத் திரும்பப் பெற வேண்டும் என்று மிரட்டினார். அந்த மிரட்டலே கல்வி அமைச்சர் செங்கோட்டையன் மழுப்பலுக்குக் காரணமாக இருக்கலாம் என்று தெரிகிறது.

ஜாதி அடையாளம்தான் இந்துவின் அடையாளம் என்பதை எச். ராஜா இதன் மூலம் மீண்டும் உறுதிப்படுத்தியிருக்கிறார். பார்ப்பனர்கள் தங்களை 'பிராமணர்கள்' என்று பிறவித் திமிரைக் காட்ட முதுகில் பூணூல் அணிகிறார்கள். எனவே ஒடுக்கப்பட்ட 'சூத்திரப்' பிரிவினர் தங்களை 'சூத்திர - பஞ்சம ஜாதிகளை அடையாளப்படுத்தும் நோக்கத்துடனேயே கைகளில் கயிறு கட்ட வேண்டும் என்கிறார் எச். ராஜா.

அருந்ததியர் சமுதாயத்தைச் சார்ந்த மாணவர்களை பள்ளி ஆசிரியர்கள் இந்தக் கயிறுகளால் அடையாளம் கண்டு பள்ளிக் கழிவறைகளை சுத்தம் செய்ய கட்டளையிடுகிறார்கள். 'சர்வ சிக்ஷ அபியான்' என்ற பெயரில் மத்திய அரசு நிதி உதவியோடு நடத்தப்படும் பள்ளிகளில் ஜாதி பாகுபாடுகள் காட்டப்படுவதை 2009ஆம் ஆண்டு தேசிய ஆலோசனைக் குழு அறிக்கை சுட்டிக் காட்டியது.

'அங்கன்வாடி' என்பது குழந்தைகளுக்கான சுகாதாரம், பராமரிப்பு, ஊட்டச் சத்துக்களை வழங்கி,




அவர்களின் மூளை வளர்ச்சியை உறுதிப்படுத்தும் நோக்கத்தோடு மத்திய அரசு நிதி உதவியுடன் இயங்கும் அமைப்பு. இந்த மய்யங்களில் பிற்படுத்தப்பட்ட தலித் குழந்தைகளிடையே பாகுபாடு காட்டப்படுகிறது. பிற்படுத்தப்பட்ட ஜாதியைச் சார்ந்த பிள்ளைகள் தங்களுக்கான உணவு பரிமாறும் தட்டுகளை வீடுகளிலிருந்தே பெற்றோர்கள் உத்தரவுப்படி எடுத்து வருகிறார்கள். தலித் குழந்தைகள் சாப்பிட்ட தட்டுகளை தம்ளர்களை இவர்கள் பயன்படுத்தக் கூடாது என்று பெற்றோர்களால் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

தலித் மக்களின் உரிமைகளுக்காக 'எவிடென்ஸ்' என்ற தொண்டு நிறுவனம் நடத்தி வரும் கதிர், இத் தகவல்களை வெளியிட்டுள்ளார். தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட தகவல்கள் அரசுப் பள்ளிகளில் குழந்தைகளுக்கிடையே நிலவும் தீண்டாமையை அம்பலப்படுத்துகிறது. மதுரை மாவட்டம் குரையூர் எனும் கிராமத்திலுள்ள நடுநிலைப் பள்ளிகளில் தலித் மாணவர்கள் சேர்க்கப்படுவதே இல்லை. 1970ஆம் ஆண்டிலிருந்து இதுவரை ஒரு தலித் மாணவர்கூட இப்பள்ளியில் சேர்க்கப்படாததை 'எவிடென்ஸ்' கதிர் சுட்டிக் காட்டுகிறார். பொள்ளாச்சி அருகே உள்ள ஒரு பள்ளியில் ஒரு கணித ஆசிரியர், 'தலித்' என்ற சொல்லை 'கழித்தல்' என்பதற்கு அடையாளப்படுத்தி வகுப்புகளை எடுத்து வருகிறார். அவரிடம் விசாரணை நடத்தியபோது கணிதத்தை எளிதில் புரிய வைக்க இந்த முறையைப் பயன்படுத்தியதாகக் கூறினார்.

வகுப்புகளில் தலித் மாணவர்கள் பின்னால் உள்ள இருக்கைகளில் அமர வேண்டும். பள்ளிகளுக்கு செருப்பு அணிந்து வரக்கூடாது. பொதுக் கழிவறையைப் பயன்படுத்தக்கூடாது என்ற தடைகளும் பின்பற்றப்படுகின்றன. சில தலித் ஆசிரியர்கள், அம்பேத்கர் குறித்த பாடத்தை வகுப்புகளில் எடுப்பதற்கு ஆதிக்க ஜாதி ஆசிரியர்கள் அனுமதிப்பது இல்லை.

'மாணவர்கள் அணியும் கயிறுகளின் நிறம் ஜாதிக் கட்சிகளின் கொடியில் இடம் பெறும் நிறமாகவோ அல்லது ஜாதி சங்கங்கள் அடையாளப்படுத்தும் நிறமாகவுமே இருக்கிறது. ஜாதிக் கட்சிகளும் ஜாதி சங்கங்களும் பள்ளி மாணவர்களிடம் இந்தக் கயிறுகள் கட்டுவதைக் கட்டாயப்படுத்துகின்றன. சிவப்பு, மஞ்சள், பச்சை, காவி நிறங்களில் கட்டப்படும் இந்தக் கயிறுகள், 'கீழ் ஜாதி', 'மேல் ஜாதி'யினரை அடையாளப்படுத்துகின்றன' என்கிறார், எவிடென்ஸ் கதிர்.

மதுரை மாவட்டம் கப்பலூர் கிராமத்தைச் சார்ந்த 21 வயது மாணவனின் பெயர் 'ஜாதி ஒழிப்பு வீரன்'. "எனது தந்தை, பெரியார் இயக்கத்தைச் சார்ந்தவர். அவர் எனக்கு இந்த பெயர் சூட்டியதால் பள்ளிகளில் தொடர்ந்து நான் அவமதிப்புக்கும் தொல்லைகளுக்கும் உள்ளாகி வருகிறேன். பல ஆசிரியர்கள் என்னை கேவலமாகப் பேசி எனது பெயரை மாற்றிக் கொள்ளும்படி கூறினார்கள். நான் எனது பெயரை மாற்றிக் கொள்ளப் போவதில்லை. அதில் உறுதியாக இருக்கிறேன்" என்றார். 16 வயதில் இந்தப் பெயருக்காவே ஜாதி ஒழிப்பு வீரன் தாக்குதலுக்கு உள்ளானார். தாக்கியவர்கள் மீது வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் 2014இல் வழக்கு தொடரப்பட்டது என்ற தகவலையும் எவிடென்ஸ் கதிர் கூறுகிறார். இப்போது ஜாதி ஒழிப்பு வீரன், தனியார் நிறுவனம் ஒன்றில் வேலை செய்கிறார்.

'தீண்டாமை சட்டப்படி குற்றம்' என்று சட்டம் கூறுகிறது. மாணவர்களிடையே ஜாதிக் கயிறுகள் வழியாக 'தீண்டாமை' நிலைநிறுத்தப்படுகிறது. எச். ராஜா போன்ற பார்ப்பனர்களோ இதை இந்து மத அடையாளம் என்கிறார்கள்.

1941ஆம் ஆண்டு ஹிட்லர் ஜெர்மனியில் ஒரு உத்தரவைப் பிறப்பித்தார். அதன்படி 6 வயதுக்கு மேற்பட்ட யூதர்களும் நாஜிக்களின் ஆக்கிரமிப்பு பகுதிகளில் வாழும் யூதர்களும் யூதர் என்ற பெயர் பொறிக்கப்பட்ட மஞ்சள் நிற கைப்பட்டைகளை அணிய வேண்டும்; இது கட்டாயம் என்று ஹிட்லரின் உத்தரவு கூறியது. அதைத்தான் இந்த ஜாதிக் கயிறும் நினைவுபடுத்துகிறது என்று ஒரு அய்.அய்.டி. பேராசிரியர் கூறுகிறார்.

கல்வி நிறுவனங்களில் மத அடையாளங்களே தடை செய்யப்பட வேண்டும். பிரான்ஸ் நாடு சிலுவை, குல்லா, தலைப்பாகை, பர்தா உள்ளிட்ட எந்த மத அடையாளத்தையும் அணியக் கூடாது என்று தடை செய்துள்ளது. பள்ளி மாணவர்களிடையே 'ஜாதி நஞ்சை'த் திணிக்கும் கயிறுகள் கட்டாயம் தடை செய்யப்பட வேண்டும்.

('இந்து' ஆங்கில நாளேடு ஆக. 18, 2019இல் வெளியிட்ட கட்டுரையைத் தழுவி எழுதப்பட்டது)

## காஷ்மீரில் அமைதி திரும்பி விட்டதா?

370ஆவது பிரிவு நீக்கத்தால் ஜம்மு காஷ்மீரில் எந்தப் பிரச்சினையும் இல்லை என்று கூறி வந்தது மோடி ஆட்சி. பார்ப்பன தேசிய ஊடகங்களும் மக்களின் எதிர்ப்பை மூடி மறைத்து வந்தன. பி.பி.சி. உள்ளிட்ட சர்வதேச ஊடகங்கள், காஷ்மீரில் மக்களின் போராட்டத்தை ஒளி பரப்பின. அலைபேசி, இணைய தொடர்புகள் முடக்கப்பட்டன. பிறகு இயல்பு நிலை திரும்பி விட்டதாகக் கூறி தொடர்புகள் தரப்பட்ட நிலையில், மீண்டும் ஒரே நாளில் மீண்டும் தொடர்புகள் துண்டிக்கப்பட்டு விட்டன.

இப்போது காஷ்மீர் பள்ளத்தாக்குப் பகுதியில் இராணுவம், துணை இராணுவப் பிரிவுகளைச் சார்ந்த 9.5 இலட்சம் படையினர், காஷ்மீர் பள்ளத்தாக்கில் மட்டும் குவிக்கப்பட்டுள்ளதாக 'டெக்கான் கிரானிக்கல்' ஏட்டின் ஸ்ரீநகர் செய்தியாளர் எழுதுகிறார். அங்குலம் அங்குலமாக இராணுவம் குவிக்கப்பட்டுள்ளது என்றும் மக்கள் வீடுகளில் முடங்கிக் கிடக்கிறார்கள் என்றும் கடைகள் மூடப்பட்டு விட்டன என்றும் அந்த செய்தியாளர் கூறுகிறார். ஏராளமான மருந்து மாத்திரைகளோடு 100 மருத்துவர்கள் இராணுவத்துக்கு மருத்துவ உதவி வழங்க விமானம் வழியாகக் கொண்டு வரப்பட்டுள்ளனர் என்றும் அந்த செய்தி கூறுகிறது.

370 ஆவது பிரிவு நீக்கம் செய்த பிறகு 30,000 கூடுதல் இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர். காஷ்மீர் பள்ளத்தாக்கில் 'போர்க் காலம்' போன்ற சூழல் நிலவுகிறது என்றும் 'டெக்கான் கிரானிக்கல்' ஏடு செய்தி வெளியிட்டுள்ளது. பள்ளத்தாக்கு முழுதும் கல்லெறி சம்பவங்கள் நிகழ்வதாக 'டைம்ஸ் ஆப் இந்தியா', 'இந்து' நாளேடுகள் தவிர்க்கவியலாத நிலையில் செய்தி வெளியிட்டுள்ளன.

# சர்வதேச பிரச்சினையாகிறது காஷ்மீர்!

ஜம்மு, காஷ்மீர் மாநில சிறப்புரிமையை தன்னிச்சையாக நீக்கம் செய்த நடுவண் ஆட்சி, இப்போது சர்வதேசப் பிரச்சினையாக அதை மாற்றிவிட்டது. இது குறித்து உண்மைக்கு மாறான தகவல்களை நடுவண் ஆட்சியும் பார்ப்பன தேசிய ஊடகங்களும் திட்டமிட்டு பரப்பி வருகின்றன.

இப் பிரச்சினையை அய்.நா. பாதுகாப்பு கவுன்சிலுக்கு சீனா வழியாக பாகிஸ்தான் கொண்டு சென்றது. இதில் பாகிஸ்தான் முயற்சி தோல்வி அடைந்து விட்டதாகவும், இந்தியா இராஜ தந்திரத்தோடு, பாகிஸ்தான் சதியை முறியடித்து விட்டது என்றும், நடுவண் அரசும் பார்ப்பன ஊடகங்களும் கருத்துகளை உருவாக்கி வருகின்றன. இது குறித்து ‘டெக்கான் கிரானிக்கல்’ ஆங்கில நாளேடு (ஆக.18) ஒரு தலையங்கம் தீட்டியுள்ளது. அதில் இடம் பெற்றுள்ள முக்கிய கருத்துகள்:

பாகிஸ்தான் திட்டத்தை இந்தியா தோற்கடித்துவிட்டதா இல்லையா என்பதைவிட மற்றொரு முக்கிய அம்சத்தைப் பார்க்க வேண்டும். காஷ்மீர் பிரச்சினையை 50 ஆண்டுகள் இடைவெளிக்குப் பிறகு அய்.நா. பாதுகாப்புக் கவுன்சில் விவாதத்துக்கு எடுத்துக் கொண்டிருக்கிறது என்பது முக்கியமானது. 1972ஆம் ஆண்டு சிம்லா ஒப்பந்தம் உருவான பிறகு காஷ்மீர் பிரச்சினையை சர்வதேசப் பிரச்சினையாகாமல் இந்தியா கடும் முயற்சிகளை மேற்கொண்டு தடுத்து வந்தது. இப்போது அய்.நா. பாதுகாப்புக் கவுன்சிலில் விவாதத்துக்கு வந்து விட்டது. இது முதல் பின்னடைவு.

இரண்டாவதாக சிம்லா ஒப்பந்தப்படி காஷ்மீர் தொடர்பான அனைத்துப் பிரச்சினைகளையும் இந்தியாவும் பாகிஸ்தானும் தங்களுக்குள் பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக் கொள்ள வேண்டும். இராணுவ அழுத்தங்களைப் பயன்படுத்தக் கூடாது என்று 1999இல் இரு நாடுகளும் லாகூரில் பிரகடனமாக அறிவித்தன. இராணுவ நடவடிக்கைகள் கூடாது என்ற பிரகடனம், கடந்த பல ஆண்டுகளில் தோல்வி அடைந்து விட்டது. அவ்வப்போது இராணுவ மோதல்கள் நடந்தே வருகின்றன. ‘இரு நாடுகள் மட்டுமே தங்களுக்குள் பேசித் தீர்க்க வேண்டும்’ என்ற மற்றொரு பிரகடனம் இப்போது எந்த நிலைக்குப் போயிருக்கிறது? அய்.நா. பாதுகாப்புக் கவுன்சில் விவாதித்து, இரு நாடுகளும் பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்று **தலையிட்டு** அறிவுறுத்தும் நிலைக்கு வந்து சேர்ந்துவிட்டது. இது இரண்டாவது பின்னடைவு.

ஆகஸ்டு 5ஆம் தேதி, 370ஆவது பிரிவை நீக்கம் செய்த, உள்துறை அமைச்சர் அமித்ஷா, இது இந்தியாவின் உள்நாட்டுப் பிரச்சினை என்றார். அய்.நா. தலையிட முடியாது என்பதுதான் இதன் அர்த்தம். பிரச்சினையை இரகசியமாக விவாதித்த அய்.நா. பாதுகாப்புக் கவுன்சில், தனது கருத்தை பத்திரிகை செய்தியாக வெளி யிடவில்லை. பாதுகாப்புக் கவுன்சிலில் இடம் பெற்ற 5 நாடுகளிடையே இதில் ஒருமித்த கருத்து உருவாகவில்லை என்பதே இதற்குக் காரணம். இது மூன்றாவது பின்னடைவு.

கூட்டம் தொடங்குவதற்கு சில மணி நேரத்துக்கு முன்பு பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான், அமெரிக்க அதிபர் டிரம்புடன், தொலைபேசியில் பேசினார். அது குறித்து அமெரிக்க அரசுத் துறை வெளியிட்ட அறிக்கையில், ‘பாகிஸ்தானும் இந்தியாவும் **காஷ்மீரில் பதட்டத்தைக் குறைக்க’** பேச்சுவார்த்தையைத் தொடங்க வேண்டும் என்று டிரம்ப் கேட்டுக் கொண்டார்” என்று கூறப்பட்டுள்ளது. ஆக, ‘காஷ்மீரில் பதட்ட நிலை’ உருவாகிவிட்டது என்ற உண்மையை டிரம்ப் அறிக்கை பதிவு செய்திருக்கிறது.

“காஷ்மீரில் உருவாகியுள்ள பதட்டத்தைக் குறைக்க வேண்டும் என்று 370ஆவது பிரிவு நீக்கத்துக்கு முன் எந்த நாடாவது கூறியிருக்குமானால் இந்தியா ஆவேசத்துடன் ‘அது எங்களுக்கு தெரியும்’ என்று ஆவேசமாக சிலிர்த்து எழுந்திருக்கும். ஆனால், அமெரிக்கா கூறும்போது இப்போது இந்தியா அமைதி காக்கிறது. (அமைதியாகத்தான் வேண்டும். பிரச்சினை சர்வதேச மயமாகி விட்டது) ஆப்கானிஸ்தான் அரசுடன் தாலிபான் தீவிரவாதத்தை ஒடுக்க அமெரிக்க அதிபர் செய்துள்ள ஒப்பந்தத்தை நிறைவேற்றி முடிக்க அமெரிக்காவுக்கு பாகிஸ்தான் உதவி தேவைப்படுகிறது. இந்தப் பின்னணியில் பாகிஸ்தான் கருத்தை காஷ்மீர் பிரச்சினையில் அமெரிக்கா ஒட்டு மொத்தமாக நிராகரித்துவிட முடியாது. அது மட்டுமின்றி, இப்போது 370ஆவது பிரிவு நீக்கப்பட்டது ஏன் என்பதற்கான காரணங்களை முக்கிய நாடுகளுடன் நடுவண் அரசே விளக்கி வருவதன் வழியாக, இப்பிரச்சினையை சர்வதேசப் பிரச்சினையாக்குவதற்கு நடுவண் அரசே உதவி வருகிறது” என்று எழுதியுள்ளது ‘டெக்கான் கிரானிக்கல்’. ●

## விநாயகன் சிலை ஊர்வலங்களை காவல்துறையே நடத்துமாம்

*தமிழ்நாட்டில் நடக்கும் அ.இ.அ.தி.மு.க. ஆட்சி, பா.ஜ.கவின் பினாமி ஆட்சியாகவே செயல்பட்டு வருகிறது என்பதை அதன் ஒவ்வொரு செயல்பாடுகளும் உறுதிப்படுத்துகின்றன.*

விநாயகன் சிலை ஊர்வலங்கள் என்ற பெயரில் மத அரசியல் ஊர்வலங்களை நடத்தி வரும் இந்து அரசியல் அமைப்புகள் சட்டங்களை தங்கள் கையில் எடுத்துக் கொண்டு சிறுபான்மை மக்களுக்கு எதிரான மிரட்டல் ஊர்வலங்களாக விநாயகனைப் பயன்படுத்தி வந்தன. சட்டங்களைக் கையில் எடுத்துக் கொண்டு பொது மக்களுக்கும் சட்டம் ஒழுங்கைக் காப்பாற்ற வேண்டிய காவல்துறைக்கும் பெரும் சவாலாகவே இந்த அரசியல் ஊர்வலங்கள் மாறிய நிலையில் காவல்துறை சில கட்டுப்பாடுகளை விதித்தது.

விநாயகன் சிலை ஊர்வலங்களின் சட்ட விரோத செயல்பாடுகளை முறைப்படுத்த சிலைகளை வைக்கும் ஒவ்வொருவரும் காவல்துறை தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித் துறை, மாநகராட்சி, நகராட்சி அமைப்புகள் மின்சாரத் துறை, மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் ஆகியவற்றிடமிருந்து தனித்தனியாக அனுமதி பெற வேண்டும் என்ற கட்டுப்பாடுகள் கொண்டு வரப்பட்டன. இந்தக் கட்டுப்பாடுகளைத் தளர்த்த வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றத்தில் கடந்த ஆண்டு இந்து முன்னணி சார்பில் வழக்கு தொடரப்பட்டது. நீதிமன்றம் கட்டுப்பாடுகளைத் தளர்த்த முடியாது என்று அறிவித்து விட்டது.

இப்போது அ.இ.அ.தி.மு.க. ஆட்சி, “பல்வேறு அரசுத் துறைகளில் அனுமதி வாங்கித் தரும் பொறுப்பை நாங்களே பார்த்துக் கொள்கிறோம்; நீதிமன்ற தீர்ப்புகளை ஒதுக்கித் தள்ளுங்கள்; ஒவ்வொரு விநாயகன் சிலைக்கும் ஒரு காவல்துறை ஆய்வாளர் பொறுப்பு ஏற்றுக் கொள்வார்; அவரிடம் சிலை வைக்கும் இடத்தை மட்டும் கூறி விடுங்கள். எல்லா அரசுத் துறைகளிலிருந்தும் நாங்களே அனுமதி பெற்றுத் தந்து விடுகிறோம்” என்ற ஒற்றைச் சாளர முறையை அறிவித்துள்ளது. “இந்து முன்னணியினர் பெற வேண்டிய அனுமதிகளைப் பெற்றுத் தர வேண்டியது இனி எங்கள் பொறுப்பு” என்று காவல்துறை கூறுகிறது. இதற்கான உத்தரவுகளை பா.ஜ.க. பினாமி ஆட்சி பிறப்பித்திருக்கிறது. இதன் வழியாக பல்வேறு அரசுத் துறைகளில் பெற வேண்டிய அனுமதி, சடங்காக மாற்றப்பட்டுவிட்டது. காவல்துறையே, மற்ற அரசுத் துறைகளிடம் அனுமதி கேட்கும்போது மறுத்து விடுவார்களா என்ன?

இனி அடுத்த ஆண்டு விநாயகன் சிலைகளை ஒவ்வொரு பகுதியிலும் நிறுவும் பொறுப்பை அந்தப் பகுதிகளில் உள்ள காவல் நிலையங்களே மேற்கொள்ளும்; இந்து முன்னணியினர் பேரணிக்கு மட்டும் வந்தால் போதும் என்ற அறிவிப்பு வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

மக்கள் பிரச்சினைகளைப் பேசுவதற்கான கூட்டங்கள், கருத்தரங்குகள், ஆர்ப்பாட்டங்களுக்கு காவல்துறை அனுமதி கிடைப்பது அவ்வளவு எளிதானது அல்ல; நீதிமன்றம் வரை போக வேண்டியிருக்கிறது. ஆனால் மத அரசியல் பிரச்சாரத்துக்கு காவல்துறையே பொறுப்பேற்று செயல்படும் என்பதுதான் தமிழ்நாட்டின் நிலை! வெட்கக் கேடு!

## தமிழகத்தில் புதிய பள்ளிக்கு மத்திய அரசு அனுமதி மறுப்பு

மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டுத்துறை, தமிழகத்தில் பள்ளிக் கல்வித் துறைக்கான நிதியை ஒதுக்கீடு செய்து அனுமதி அளித்துள்ளது. அதில் புதிதாக பள்ளிகளை திறப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யாமலும், அனுமதி அளிக்காமலும் உள்ளது குறிப்பிடத்தக்கது. மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறையின் 2019-20ஆம் ஆண்டிற் கான திட்டங்களுக்கு அனுமதி அளிப்பதற்கான வாரிய கூட்டம் கடந்த மே மாதம் 16ஆம் தேதி நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் தமிழகத்தின் சார்பில் பள்ளிக் கல்வித்துறை செயலாளர் பிரதீப் யாதவ் கலந்துகொண்டுள்ளார். அப்போது, தமிழகத்தில் பள்ளி மாணவர்களுக்கு கல்வி, வேலைவாய்ப்பு, ஆலோசனை வழங்குவதற்கு 14417 என்ற கட்டணமில்லா எண் செயல்படுத்தப் படுவது, கல்வித் தகவல் மேலாண்மை மூலம் மாண வர்கள், பள்ளிகள் குறித்த புள்ளி விவரங்கள் பெறப்பட்டு, 2019-20ஆம் கல்வியாண்டில் ‘ஸ்மார்ட் கார்டு’ மாணவர்களுக்கு வழங்கப்பட உள்ளதை யும் எடுத்துரைத்துள்ளார்.

இலவச கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின் படி 33 சதவீத நடுநிலைப் பள்ளிகளில் பாடத்திற்கான ஆசிரியர்கள் இல்லாமல் உள்ளனர். பள்ளி மேலாண்மைக் குழு அனைத்துப் பள்ளிகளிலும் உருவாக்கப்பட்டு, அவர்களுக்கு பயிற்சி அளித்து பள்ளியின் வளர்ச்சிக்கு பயன்படுத்த வேண்டும். பள்ளி ஆசிரியர்களுக்கு புகைப்படத்துடன்கூடிய அடையாள அட்டை வழங்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

இந்த கூட்டத்தில், தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், ஆசிரியர் பயிற்சி நிறுவனம் ஆகியவற்றிற்கு ரூ. 3 ஆயிரத்து 171 கோடியே 23 லட்சத்து 42 ஆயிரம் ஒதுக்கீட்டை மத்திய அரசு செய்துள்ளது. மாநில அரசு தனது பங்குத் தொகையாக ரூ. 1,114 கோடியே 48 லட்சம் செலுத்த வேண்டும். தொடக்க, நடுநிலை மற்றும் உயர் நிலைப் பள்ளிகளுக்கான ஆண்டு பராமரிப்பு மானியம் வழங்குவ தற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டு புதியதாக 5 உண்டு உறைவிடப் பள்ளிகள் துவக்குவதற்கு அனுமதி அளிக்கப் பட்டுள்ளது. புதியதாக தொடக்க, நடுநிலை, உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளை திறப்பதற்கு அனுமதி அளிக்கப்படவில்லை.

## இலஞ்சம் – வணிகம் – அரசியல் செல்வாக்கு – ஊழல்

# ஆன்மீகத்தின் முகத்திரையைக் கிழித்த அத்திவரதர் தரிசனம்

*அத்திவரதருக்கு திரண்ட பக்தர்கள் கூட்டம், தமிழ்நாட்டில் ஆன்மீக வளர்ச்சியைக் காட்டுவதாக பார்ப்பனர்கள், பா.ஜ.க.வினர் கூறுகிறார்கள். கூட்டம் கூடியது உண்மைதான். ஆனால், ஆன்மீகம் தன்னுடன் ஊழல்– வணிகம்– மோசடிகளையும் இணைத்துக் கொண்டு விட்டது என்பதும், கடவுள் மீது உண்மையான பக்தியோ அதன் சக்தி தன்னைத் தண்டித்து விடும் என்ற அச்சமோ இல்லை என்பதையும் நாட்டுக்கு உணர்த்தியிருக்கிறது. அத்திவரதர் தரிசனம் வழியாக நடந்த மோசடி - ஊழல் - அரசியல் செல்வாக்கு - வணிகம் ஆகியவற்றை படம் பிடித்துக் காட்டியிருக்கிறது ‘ஜுவி’ கட்டுரை. கட்டுரையை படித்தாலே ஆன்மீகத்தின் முகத்திரை கிழிந்து விடும்.*

“பெருமாளே... உனக்கு முன்னாடியே இவ்வளவு அநியாயமா?” அத்திவரதரை தரிசித்து விட்டு வந்த பெரும்பாலான பக்தர்களின் மனக் குமுறல், இதுவாகத்தான் இருந்தது. குறைந்தது ஐந்து மணி நேரமாவது நின்று, அடிபட்டு, மிதிபட்டு அத்திவரதரை நெருங்கும் பக்தர்கள், பெருமாளை தரிசிப்பதற்குள் நொந்து நூலாகி விட்டனர். அப்பாவி பக்தர்களின் பக்தியைப் பயன்படுத்தி, பல்வேறு தரப்புகளிலும் சுமார் ஆயிரம் கோடி ரூபாய்க்கும் அதிகமான பணத்தைக் கொள்ளையடித்திருக் கிறார்கள் என்கிறார்கள் விவரம் அறிந்தவர்கள்.

காஞ்சிபுரம் வரதராஜப்பெருமாள் கோயிலின் அனந்தசரஸ் குளத்தில் வைக்கப்பட்டிருந்த அத்திவரதர், 2019, ஜூன் 28-ம் தேதி அதிகாலை 2:30 மணிக்கு வெளியே கொண்டுவரப்பட்டார். ஜூலை 1ஆம் தேதியிலிருந்து வசந்த மண்டபத்தில் மக்களுக்கு தரிசனம் அளித்துவந்தார். 40 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் இந்த வைபவம், இந்தமுறை மிகப்பெரிய அளவில் மக்கள் வரவேற்பைப் பெற்று, ஆகஸ்ட் 17ஆம் தேதியுடன் முடிவடைந்துள்ளது. இதற்குள்ளாக ஏகப்பட்ட குளறுபடிகள், காஞ்சிபுரம் நகரத்தையே மூழ்கடித்துவிட்டன. வி.வி.ஐ.பி வரிசையில் ரௌடி வரிச்சியூர் செல்வம் சுவாமியை தரிசித்ததில் தொடங்கி, காவல் ஆய்வாளர் ரமேஷை காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் பொன்னய்யா கடுமையாகத் திட்டும் வீடியோ வரை பரபரப்பைப் பற்றவைத்தன. இப்படியான சூழலில்தான், அத்தி வரதர் வைபவத்தில் புழங்கும் தொகை எவ்வளவு, பக்தர்களின் பணத்தை எப்படியெல்லாம் கொள்ளை யடித்தார்கள் என்பதை அறிய, களம் இறங்கினோம்.

காஞ்சிபுரம் நகரவாசி ஒருவர் கூறுகையில், “வைபவத்தின் முதல் நாளான ஜூலை 1-ம் தேதி மட்டும் ஒரு லட்சம் பேர் தரிசித்த நிலையில், அடுத்தடுத்த நாள்களில் சராசரியாக 15,000 பேர் மட்டுமே தரிசித்தனர். இரண்டாவது வாரத்திலிருந்து தான் கூட்டம் அதிகரித்தது. லட்சக்கணக்கான மக்கள் குவிந்தார்கள். ஆனால், அதற்கேற்ற கழிவறை வசதியோ, குடிநீர் வசதியோகூட ஏற்படுத்தப்பட வில்லை. மக்களை மந்தையாக ஓர் இடத்தில் ஒன்றுசேர்த்து, ‘வலு இருப்பவர்கள் கோயிலுக்குச் செல்லுங்கள்’ என்பதுபோல் மாவட்ட நிர்வாகம் செயல்பட்டது. இந்த வைபவத்துக்காக அரசு ஒதுக்கிய 29 கோடி ரூபாயில் மாவட்ட நிர்வாகம் என்ன செய்தார்கள் என்றே தெரியவில்லை.

காஞ்சிபுரம் தற்காலிகப் பேருந்து நிலையங்களி லிருந்து, வரதராஜப்பெருமாள் கோயில் வரை ஆட்டோவில் செல்ல, 400 முதல் 800 ரூபாய் வரை வசூலித்தார்கள். பைக் டாக்ஸியில் பயணிக்க, 100 ரூபாய் ஆனது. திரும்பி வரவும் இதே அளவு பணத்தைப் பறித்தார்கள். மாவட்ட நிர்வாகம் அறிவித்த மினி பஸ் சேவையை கண்ணில்கூடப் பார்க்க முடிவில்லை. காஞ்சிபுரம் விடுதிகள் அனைத்தையும் கணக்கிட்டால், மொத்தம் 3,000 அறைகள் இருக்கின்றன. அறை வாடகை 10,000 ரூபாய்க்கு குறைவாக எங்குமே கிடைக்கவில்லை.

காஞ்சிபுரத்தைச் சேர்ந்த மூன்று முன்னணி ஜவுளி நிறுவனங்கள்தான் வி.ஐ.பி பாஸ்களை ஆயிரக் கணக்கில் விற்றுத் தீர்த்தன. ‘10,000 ரூபாய்க்கு புடவை வாங்கினால், பாஸ் இலவசம்’ என்ற மறைமுகச் சலுகையால், இந்த 47 நாளில் மட்டுமே 200 கோடிக்கும் குறையாமல் மூன்று நிறுவனங்களும் லாபம் பார்த்துவிட்டன. தனியார் நிறுவனங்களின் வசம் பாஸ் சென்றது எப்படி? இதுகுறித்து பலர் புகார் அளித்தும், மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்கவில்லை. ஒரு நாளைக்கு நான்கு லட்சத்துக்கும் குறையாமல் பக்தர்கள் வந்தனர். வி.ஐ.பி பாஸ் மூலம் மட்டுமே சுமார் 50,000 பேர் தரிசிக்கிறார்கள். இந்த பாஸ்கள், பெரும்பாலும் கள்ளச்சந்தையில் 8,000 ரூபாய்க்குக் குறையாமல் விற்கப்பட்டவை. கணக்குப் போட்டால், தொகை தலைசுற்ற வைக்கிறது.

பொது தரிசன வழியைவிட்டால், ‘50 ரூபாய் சிறப்புக் கட்டண டிக்கெட்’ என்று முதலில் மாவட்ட நிர்வாகம் அறிவித்தது. பிறகு விரைவு தரிசன டிக்கெட்டாக மாற்றி, முதலில் 500 பேருக்கும், இறுதியாக 2,000 பேர் வரையிலும் வழங்கினர். நான்கு லட்சம் பேர் கூடும் வைபவத்துக்கு, வெறும் 2,000 பேருக்கு மட்டும் விரைவு தரிசன டிக்கெட் வரைமுறை ஏன் நிர்ணயிக்கப்பட்டது? ஆன்லைன் மூலமாகப் பதியப்படும் இந்த டிக்கெட்டுகள் பெரும்பாலும் கிடைப்பதில்லை. பொதுதரிசனத்தை விட்டால், கள்ளச்சந்தையில்தான் பாஸ் வாங்க வேண்டும் என்கிற நிலைமையை, மாவட்ட நிர்வாகம் வேண்டுமென்றே உருவாக்கியது. இதுதான் அவர்கள் கொள்ளையடிப்பதற்கு அஸ்திவாரம்.

வி.வி.ஐ.பி., வி.ஐ.பி., உபயதாரர் என மூன்று வகையான பாஸ்கள் விநியோகிக்கப்பட்டன. இவை ஒரு நாளைக்கு எவ்வளவு, யாருக்கு விநியோகிக்கப் பட்டன என்கிற கணக்கே இல்லை. ஒரு வி.ஐ.பி பாஸ் 10,000 ரூபாய் என்றாலும், அதை வாங்க வெளிமாநில பக்தர்கள் தயாராக இருந்தார்கள். இவர்களை வளைப்பதற்கு என்றே மாவட்ட அதிகாரிகள், போலீஸ் அதிகாரிகள், பத்திரிகையாளர்கள், பட்டர்கள் அனைவரும் புரோக்கர்களாக உலவினர். ஒரு நாளைக்கு பாஸ் விநியோகத்தில் மட்டுமே சுமார் 25 கோடி ரூபாய்க்கும் குறையாமல் சம்பாதித் துள்ளனர் என்கின்றனர் விவரமறிந்த வட்டாரத்தினர். இதுதவிர, அய்ந்தாயிரம் வி.ஐ.பி பாஸ்கள், சென்னை யில் இருந்த இரண்டு முக்கியப் புள்ளிகள் மூலம் திருப்பதி தேவஸ்தானத்துக்கு நெருக்கமானவர் களிடம் சென்றுவிட்டனவாம். இவை வெளிமாநில பக்தர்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

மொத்தம் 47 நாள்களையும் கணக்கிட்டால், 1,175 கோடி ரூபாய் பாஸ் விற்றதிலேயே வருமானம் ஈட்டியுள்ளனர் என்கிறார்கள். முருகனின் பெயர் கொண்ட சம்பந்தப்பட்ட அறநிலையத் துறை அதிகாரி வாடகைக்கு எடுத்துள்ள வீட்டை சோதனையிட்டாலே, கோடிக்கணக்கில் லஞ்சப் பணத்தை அள்ளலாம். காஞ்சிபுரம் மாவட்ட தாசில்தார்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஒரே பணி, வி.ஐ.பி-களை கவனிப்பதுதான். ஜவுளிக்கடை அதிபர் தொடங்கி கார்ப்பரேட் கம்பெனி சி.இ.ஓ-க்கள் வரை மாவட்ட நிர்வாகம் மூலம் தரிசனம் செய்தார்கள். இவர்களை, தாசில்தார்கள் நன்றாக கவனித்துக் கொண்டார்கள்.

இவர்கள்தான் கொள்ளையடிக்கிறார்கள் என்றால், கோயிலுக்கு உள்ளே சில பட்டர்கள், இந்து அறநிலையத் துறை அதிகாரிகளின் ஆட்டம் இன்னும் அதிகம். அத்திவரதருக்கு முன்னே அமர வைப்பதற்கு 50,000 ரூபாய், நிற்பதற்கு 30,000 ரூபாய், அத்திவரதர் கழுத்தில் உள்ள மாலைக்கு 20,000 ரூபாய், போட்டோ எடுத்துக்கொள்ள 10,000 ரூபாய் என, எல்லாவற்றிலும் வசூல் வேட்டையாடியதாக குற்றச்சாட்டு உள்ளது. பக்தர்கள் செல்லும் வரிசையில், போதிய அளவில் உண்டியல்கள் வைக்கப்படவில்லை. இதனால், காணிக்கையை பட்டர்கள் வைத்திருக்கும் தட்டில் மட்டுமே செலுத்தும்படி பார்த்துக் கொண்டார்கள். காணிக்கையாக 100 ரூபாய் முதல் 2,000 ரூபாய் வரையில் தாராளமாகச் செலுத்தப்பட்டது. பல பக்தர்கள், நகைகளை வழங்கினர். அவையெல்லாம் பெருமாளுக்குச் சென்றனவா அல்லது பட்டர்களும் அதிகாரிகளும் பங்கு பிரித்துக்கொண்டார்களா?” என்று பொங்கினார் அந்த நகரவாசி.

கோயில் உபயதாரரான சந்தான கிருஷ்ணன் கூறுகையில், “என் தந்தை சண்முகப்பிள்ளை அறக்கட்டளை பெயரில், பிரமோற்சவத்தில் 6ஆம் நாள் உற்சவமான தங்க சப்பரம் வேணுகோபாலன் திருக்கோலம், மார்கழி பௌர்ணமி திருமஞ்சனம், சங்கராந்தி திருமஞ்சனம், கார்த்திகை அஸ்தம் நித்தியபடி, பங்குனி அஸ்தம் நித்தியபடி, ரதசப்தம் ஆஸ்தானம் ஆகிய உற்சவங்களுக்கு, கடந்த 30 ஆண்டு களாக பெருமாள் கைங்கரியம் செய்துவருகிறோம். அத்திவரதரை சேவிக்க, சிறப்பு தரிசனம் நுழைவுச் சீட்டு கேட்டு தேவஸ்தானத்தில் விண்ணப்பித்ததற்கு, மாவட்ட ஆட்சியரை அணுகும்படி கூறிவிட்டனர். அங்கு உள்ள அதிகாரிகளிடம் நடையாக நடந்தும் பலன் இல்லை. இதனால், ஜூலை 16ஆம் தேதி மாவட்ட ஆட்சியருக்கு மெயில் செய்தேன். அதற்கும் பதில் இல்லை. எனக்கு உபயதாரர் பாஸ்கூட அளிக்க வில்லை. ‘பெருமாள் கைங்கரியம் செய்து என்ன புண்ணியம்? ஒரு பாஸ்கூட வாங்க முடிய வில்லையே’ என்று சொந்தபந்தங்களின் ஏளனப் பேச்சுக்கு ஆளானதுதான் மிச்சம். எல்லாம் அந்தப் பெரு மாளுக்கே வெளிச்சம்!” என்றார் வேதனையுடன்.

காவல் ஆய்வாளரை தரக்குறைவாக விமர்சித்த குற்றச்சாட்டில், மாவட்ட ஆட்சியர்மீது மாநில மனித உரிமைகள் ஆணையம் நோட்டீஸ் அனுப்பி யுள்ளது. ஆட்சியர் பொன்னய்யா மீது, ஓய்வுபெற்ற காவல் அதிகாரிகள் பலர் காவல் நிலையங்களில் புகார் அளித்துள்ளனர். இராமேஸ்வரம் டவுன் காவல் நிலையத்தில் புகார் பெறப்பட்டு, சி.எஸ்.ஆர் கொடுக்கப்பட்டுள்ளது. ●

**– புரட்சிப் பெரியார் முழக்கம் 22.08.2019**

## உபநிஷத்துகள் கூறுகின்றன : சிலை வழிபாடு மூடர்களுக்கு மட்டுமே உரியது!

***அத்திவரதர் சிலை தரிசனத்துக்கு மக்கள் திரண்டார்கள். ஆனால் வேதங்களுக்கு விளக்கவுரை வழங்கிய உபநிஷத்துகள் சிலை வணக்கம் மூடர்களுக்கே உரியது என்று கூறுகிறது.***

“அக்நி ரதே லோத் துவிஜாதீ நரம் முனி நாம் ஹிருதி தைவதம்: பர்மாஸ்வ பாபுத்தாரம் சர்வத்ர சமதர்கின” - **உத்தரகீதை - சுலோகம்.**

**இதன் பொருள் :** துவிஜர்களுக்குத் தெய்வம் நெருப்பில்; முனிவர்களுக்குத் தெய்வம் இருதயத்தில்; புத்தி இல்லாத மூடர்களுக்குத் தெய்வம் விக்கிரகத்தில்; சமதிர்ஷ்ட்டி உடையவர்களுக்கு தெய்வம் எங்கும்.

“தீர்த்தே தாதையோ எக்ஞே - கார்ஷ்ட்டே பாஷாண கேபதா சிவம்பசிய தீ மூடாத்மா சிலோதெஹெபர் திஷ்டி தர.” **- ஸகந்தம் - ஞானயோக காண்டம்**

**இதன் பொருள் :** தீர்த்ததிலும், தானத்திலும், தபசிலும், யக்ஞத்திலும், கட்டையிலும், கல்வியிலும் சிவன் இருப்பதாக மூடர்கள் நினைக்கிறார்கள். சிவன் தனக்குள்ளாகவே இருக்கிறது.

“சிவம் ஆத்ம நிபஸ்யந்தி ப்ரதி மாஸு நயோகிநோ, அக்ஞானம் பாவ நார்த்தாய மரதிம பரிகல்பிதா.”

**இதன் பொருள் :** யோகிகள் சிவனைத் தமக்குள்ளே காண்பார்களேயன்றி பிரதிமைகளிற் காணார் அக்ஞானிகளுக்குப் பாவனார்த்தம பிரதிமைகள் செய்யப்பட்டிருக்கிறது.

“அபஸுதே லாம நீஷினாம் காஷ்ட லோஷ்ட்டேஷீ மூடாநாம் யுக் தஸ்யாத்ம நிதேலதா.” - **சாதாத பலசன சுலோகம்**

**இதன் பொருள் :** சாதாரண மனிதருக்குத் தெய்வம் நீரில், சற்றுத் தெரிந்தவர்களுக்குத் தெய்வம் ஆகாசத்தில், முட்டாள்களுக்குத் தெய்வம் கல்லிலும் கட்டையிலும் யோகிகளுக்குத் தெய்வம் அவர்களுக்குள்ளே.

“எவம குணா நுஸாரோண ரூபாணி விவிதாநி சகல்பிதாநி ஹிதார்த்தாய பக்தாநி அல்பமே தஸாம்.” - மஹா நிர்வாணத்தில்.

**இதன் பொருள் :** இவ்வித ஸ்பாவங்களை அனுசரித்துப் பலவித உருவங்கள் அற்பபுத்தி யுடையவர்கள் நிமித்தம் கற்பிக்கப்பட்டன.

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# தேசிய மருத்துவ ஆணையம் சமூக நீதிக்கு எதிரானது

தேசிய மருத்துவ ஆணையத்தை உருவாக்கும் நோக்கத்தில், மக்களவை மற்றும் மாநிலங்களவை யில் மசோதாவை மத்திய அரசு நிறைவேற்றியிருக்கிறது. இதன்மூலம் இத்தனை ஆண்டுகாலமாகச் செயல்பட்டுவந்த இந்திய மருத்துவ கவுன்சில் கலைக்கப்பட்டு, 'தேசிய மருத்துவ ஆணையம்' என்கிற புதிய அமைப்பு செயல்படவிருக்கிறது. தேசிய மருத்துவ ஆணையத்தை அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து, நாடு முழுவதும் மருத்துவர்கள் போராட்டம் நடத்திவருகின்றனர்.

மருத்துவர்கள் பற்றாக்குறை, தகுதியில்லாத மருத்துவர்கள், மருத்துவக் கல்வியில் குளறுபடிகள், ஊழல் நிறைந்த இந்திய மருத்துவ கவுன்சில்... இவையெல்லாம் தேசிய மருத்துவ ஆணையத்தை அமைப்பதற்கு மத்திய அரசு கூறும் காரணங்கள். ஆனால், இந்தக் குற்றச்சாட்டுகளை புதிய ஆணையம் சரிசெய்யுமா என்றால், 'இல்லை' என்றே கூற வேண்டும். எப்படி... வரிசையாகப் பார்க்கலாம்.

- ஆயிரம் பேருக்கு ஒரு மருத்துவர் இருக்க வேண்டும் என்கிறது உலக சுகாதார நிறுவனம். ஆனால், இந்தியாவில் 1,600 பேருக்கு ஒரு மருத்துவர் என்கிற நிலைதான் இருக்கிறது. தமிழகத்தில் 1,500 பேருக்கு ஒரு மருத்துவர் இருக்கிறார். இந்தப் பற்றாக்குறையைப் போக்க, தனியார் மருத்துவக் கல்லூரிகளை அதிகளவில் உருவாக்க வேண்டும் என்று பரிந்துரைக்கிறது தேசிய மருத்துவ ஆணையம். அரசு மருத்துவக் கல்லூரிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதைவிட்டுவிட்டு, தனியார் மருத்துவக் கல்லூரிகளுக்கு சிவப்புக்கம்பளம் விரிப்பது, கார்ப்பரேட் நிறுவனங்களை அதிகளவில் மருத்துவத் துறையில் புகுத்துவதற்கான உத்தியாகவே பார்க்கப்படுகிறது.
- நீட் தேர்வில் தேர்ச்சிபெற்று அதிக மதிப்பெண் பெற்றால் மட்டுமே அரசு மருத்துவக் கல்லூரிகளில் சேர முடியும். ஆனால் குறைந்த மதிப்பெண் பெற்று தேர்ச்சிபெற்றவர்கள், பணம் இருந்தால் தனியார் மருத்துவக் கல்லூரிகளில் சேர்ந்து மருத்துவம் படித்துவிட முடியும். ஆக, தகுதியற்ற மருத்துவர்களை அதிக அளவில் உருவாக்குவதற்கு இந்த ஆணையம் வழிவகுக்கிறது.
- உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதலின்படி, தனியார் மருத்துவக் கல்லூரிகளில் இருக்கும் 85 சதவிகித இடங்களுக்கு அரசு நிர்ணயிக்கும் கட்டணத் தொகையை மட்டுமே வசூலிக்க வேண்டும். ஆனால், தேசிய மருத்துவ ஆணையம், '50 சதவிகித இடங்களுக்கு தனியார் கல்லூரிகளே கட்டணம் நிர்ணயம் செய்துகொள்ளலாம்' என்கிறது. இதனால், பணக்காரர்கள் மட்டுமே மருத்துவர்கள் ஆக முடியும்.
- தேசிய மருத்துவ ஆணையத்தின் உறுப்பினர்களில் பெரும்பாலானோர் மத்திய அரசால் நியமிக்கப்படுவார்கள். இதனால் மாநிலங்களின் பிரதிநிதித்துவம் குறைக்கப்பட்டு, மாநில அரசின் சுகாதாரத் துறை உரிமைகள் பறிக்கப்படும். ஆணையத்தின் உறுப்பினர்களை ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்காமல் மத்திய அரசுக்கு இணக்கமானவர்களை நியமிக்கும்போது மருத்துவத் துறை கார்ப்பரேட் பிடியில் அகப்படும். இதனால், சாமானியனுக்குக் கிடைக்க வேண்டிய சுகாதார சேவை வணிகமயமாக்கப்படும்.
- மருத்துவ மாணவர்கள், எம்.பி.பி.எஸ் முடித்ததும் 'எக்ஸிட்' தேர்வு என்ற தகுதித்தேர்வில் தேர்ச்சிபெற்றால் மட்டுமே மருத்துவராகப் பணியாற்ற முடியும். முதுநிலை மருத்துவப் படிப்பில் நுழைவதற்கும் இந்தத் தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்கிறது ஆணையம். எம்.பி.பி.எஸ் படிப்பின் இறுதியாண்டில் தேர்ச்சிபெற்ற பிறகும் மேலும் ஒரு தேர்வை எழுதினால்தான் மருத்துவர் ஆக முடியும் என்பது மாணவர்களுக்குத் தேவையில்லாத சுமை. இது அவர்களை மனஉளைச்சலுக்கு ஆளாக்கும். நோயாளிகளை வைத்து மருத்துவத்தைக் கற்றுக்கொள்ளாமல், பயிற்சி மையங்கள் மூலம் மருத்துவம் படிக்க, மாணவர்கள் முயற்சி செய்வார்கள். இது 'ஏட்டுச்சுரைக்காய்' மருத்துவர்களை உருவாக்கும்.
- 'சமூகநலப் பணியாளர்கள், செவிலியர்கள் ஆகியோருக்கு, சில ஆண்டுகள் பயிற்சியளித்து மருத்துவம் பார்க்க அனுமதியளிக்கப்படும்' என்கிறது மருத்துவ ஆணையம். உயிர் காக்கும் மருத்துவ சேவையில் மருத்துவர் அல்லாதவரை மருத்துவம் பார்க்கவைப்பது ஆபத்தில் முடியும்.

இவையெல்லாம் தேசிய மருத்துவ ஆணையத்தை மருத்துவர்கள் எதிர்ப்பதற்கான முக்கியக் காரணங்கள். மருத்துவத் துறையின் தரத்தை உயர்த்துவதற்காக இந்த ஆணையம் உருவாக்கப்பட்டதாகச் சொல்லிக்கொள்ளும் மத்திய அரசு, போலி மருத்துவர்களை நியமனம்செய்து புனிதமான மருத்துவத் துறையைக் கேலிக்கூத்தாக மாற்றவே வாய்ப்புகள் அதிகம்.

1934-ம் ஆண்டு உருவாக்கப்பட்ட அமைப்பு, இந்திய மருத்துவ கவுன்சில். அதில் குளறுபடிகள், ஊழல் இருப்பதை மறுக்க முடியாது. குளறுபடிகளுக்குத் தீர்வு கண்டு, ஊழல்வாதிகளைக் கண்டறிந்து தண்டிக்க வேண்டும். அதன் தலைமைப் பொறுப்புக்கும் பிற முக்கியப் பதவிகளுக்கும் ஊழல் கறை படியாதவர்களை நியமிக்க வேண்டும். இந்திய மருத்துவ கவுன்சிலைச் சீரமைக்கும் நடவடிக்கைகளை எடுக்காமல், குற்றவாளிகளைச் சுதந்திரமாக உலாவவிட்டுவிட்டு, இப்போது அமைப்பையே மாற்றுவது ஏற்புடையதல்ல. தேசிய மருத்துவ ஆணையம் என்பது அரசியல் சாசனத்துக்கும், சமூகநீதிக்கும், மக்கள் நலனுக்கும் எதிரானது.

**- இணையத்திலிருந்து**

## சென்னையில் சுவரெழுத்து




மண்ணின் மைந்தர்களின் உரிமை முழக்க பரப்புரை பயணம் வரும் ஆகஸ்டு 26 முதல் 30 வரை தமிழகம் முழுவதும் 5 நாட்கள் நடைபெறுகிறது. அதற்கான சுவர் விளம்பரங்கள் சென்னையில், "மண்ணின் மைந்தர்களுக்கு வேலை கொடு" என்று இராயப்பேட்டை, மைலாப்பூர், எழும்பூர், அடையாறு, அண்ணா சாலை போன்ற பகுதிகளில் எழுதப்பட்டது.

## கழகப் பொறுப்பாளர் ப.அ. வைத்திலிங்கம் 105ஆவது வயதில் முடிவெய்தினார்



பெரியார் பெருந்தொண்டர் திராவிடர் விடுதலைக் கழகத்தின் பொறுப்பாளர் ப.அ. வைத்திலிங்கம் 17.8.2019 அன்று 105ஆம் அகவையில் முடிவெய்தினார்.

பிரபல திரைப்பட பாடலாசிரியர் பட்டுக் கோட்டை கல்யாணசுந்தரம் அவர்களின் நெருங்கிய நண்பர் பெரியார் பெருந்தொண்டர் வைத்திலிங்கம், பேராவூரணி அருகே அழகியநாயகிபுரம் கிராமத்தில் வசித்து வந்தார். சிங்கப்பூரில் பணியாற்றி தனது கடும் உழைப்பால் பெற்ற பெரும் செல்வத்தைக் கொண்டு அழகியநாயகிபுரம் அரசு மருத்துவமனைக்கு நிலம் வாங்கிக் கொடுத்தார் வைத்திலிங்கம்.

நிறைந்த உழைப்பும், கடன் வாங்காமல் வாழும் பண்பும், பசித்தபின் அளவோடு உண்ணும் பழக்கமும் அய்யாவின் நிறை வாழ்வுக்கு காரணமாக அமைந்தன என்று அவரே அடிக்கடி பல்வேறு கூட்டங்களில் குறிப்பிட்டிருக்கிறார். சிறந்த கவிபுனையும் ஆற்றல் கொண்டவர். கவிதைகளை கையெழுத்துப் பிரதிகளாகவே வைத்திருக்கிறார். பேராவூரணி திருக்குறள் பேரவை வைத்திலிங்கம் அவர்களுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி சிறப்பித்துள்ளது.

கழக சார்பில் தஞ்சை மாவட்ட அமைப்பாளர் சித. திருவேங்கடம் மற்றும் ஆயர் ஜேம்ஸ், மெய்ச்சுடர் வெங்கடேசன், அ. கோவேந்தன், தா. கலைச்செல்வன் அன்னாரது உடலுக்கு மலர்வளையம் வைத்து இறுதி வணக்கம் செலுத்தினர்.

## புதிய கல்விக் கொள்கை ஆபத்து: மாணவர்களிடம் இரண்டாம் கட்டமாக துண்டறிக்கை



புதிய கல்விக் கொள்கை என்கிற பெயரில் மீண்டும் குலக்கல்வியா? என்ற தலைப்புடன் மத்திய பா.ஜ.க.வின் கல்விக் கொள்கையின் ஆபத்தை மாணவர்களுக்கு புரியும் வகையில், இரண்டாம் கட்டமாக சென்னையில் ஆகஸ்டு 13, 15, 16 ஆகிய மூன்று நாட்களில் ஜெயின், குருநானக், நியூ கல்லூரி, ஸ்டெல்லா மேரிஸ், பச்சையப்பன், எம்.ஜி.ஆர் ஜானகி ஆகிய 6 கல்லூரிகளில் தமிழ்நாடு மாணவர் கழகம் சார்பில் 3000 துண்டறிக்கைகள் அச்சடிக்கப்பட்டு மாணவர் கழக தோழர்களால் வழங்கப்பட்டன. எட்வின் பிரபாகரன், கார்த்திக் இராசேந்திரன், பிரகாசு, கனி செல்வன், பரத்குமார், தமிழ், பிரவீன், யுவராஜ் ஆகியோர் துண்டறிக்கைகளை வழங்கினர். நிகழ்வை யுவராஜ் ஒருங்கிணைத்தார்.

## 'புரட்சிப் பெரியார் முழக்கம்', 'நிமிர்வோம்' ஆண்டுத் தொகுப்புகள் பள்ளிப் பாளையம் நிறைவு விழா மாநாட்டில் கிடைக்கும்!

நிமிர்வோம் 2018ஆம் ஆண்டு இதழ்களின் தொகுப்பு
(அழுத்தமான அட்டையுடன்)

விலை: ரூ. 500/-

'புரட்சிப் பெரியார் முழக்கம்' 2018ஆம் ஆண்டு தொகுப்பு
(அழுத்தமான அட்டையுடன்)

விலை : ரூ. 500/-

– நிர்வாகி

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 22nd August 2019

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN